திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சுக்களின் கருத்துக்களிலிருந்து சில செய்திகளை, என்னுடைய நிலைபாட்டை, காங்கிரஸ் கட்சியினுடைய நிலைபாடுகளை எடுத்துச் சொல்ல......(குறுக்கீடு)

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், இதன்மீது எந்த விவாதமும் கூடாது என்று. திரு. ரமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை ஏற்று, அதில் இருக்கிற நியாயத்தை உணர்ந்துதான் உங்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டதே தவிர, உங்கள் வாதத்தை தக்க நேரத்தில் தாராளமாக உங்களுக்கு வாய்ப்பு வருகிறபோது எடுத்துச் சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், ஏற்கெனவே கூட நீங்கள் எடுத்துச் சொன்ன பிறகும்கூட, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களை அனுமதித்து இருக்கிறேன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள், நினைவுபடுத்திக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன் (குறுக்கீடுகள்). விளக்கம் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. நான் திருப்பித் திருப்பி விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இதுதான் நிலைமை (குறுக்கீடுகள்). இப்போது நான் அடுத்த அலுவலுக்குப் போகிறேன் திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம் (குறுக்கீடுகள்).

3. உரிமை மீறல் பிரச்சினை.

தினமலர் நாளிதழ் மீது—அவை நடவடிக்கைகள் பற்றி வெளியிடப் பட்டுள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள், திருநெல்வேலி பதிப்பு ' தினமலர் ' நாளிதழில் பேரவை நிகழ்ச்சி குறித்து (கூச்சல்-குழப்பம்) வெளியிடப் பட்டுள்ள ஒரு செய்தி, பேரவையின் உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்). இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதற்குச் சுருக்கமான விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் (கூச்சல்-குழப்பம்).

*திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி ——....(கூச்சல்-குழப்பம்).

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் நின்று பேசிக்கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அனைவரும் அமர வேண்டும். ஒரு தரம் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் அமைதியாக அமர வேண்டும். (கூச்சல்-குழப்பம்). இரண்டாவது தடவையும் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் அமைதியாக அமர வேண்டும் (கூச்சல்-குழப்பம்). மூன்றாவது தடவையாகக் கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் அமைதியாக அமர வேண்டும் (கூச்சல்-குழப்பம்). இப்போது,
" Under Rule 120, I name the Hon. Opposition Leader, and his Colleagues and Mr, Kumari Anandan and his Colleagues "

அனைவரும் அவையைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறேன் (கூச்சல்-குழப்பம்). சார்ஜன்ட், எல்லோரையும் அவையிலிருந்து வெளியேற்றலாம் (கூச்சல்-குழப்பம்).

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துப் பத்திரிகையில் கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பு இந்த மாமன்றத்தைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்தபோதே எனக்குத் தெரியும், இது போன்று ஏதாவது செய்ய வேண்டும், அப்போதுதான் தாங்கள் வேகமாக இருப்பது நாட்டுக்குத் தெரியும் என்கின்ற உணர்வோடு செயல்படுவார்கள் என்று நான் அன்றைக்கே கருதினேன். அதைப்பற்றி அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது "இந்துப் பத்திரிகையில்கூட எழுதியிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். எனவே, அதன் விளைவாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவினுடைய பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்று அவையைவிட்டு வெளியேறியவர்கள் யாருடைய தலைமையில் வெளியேறினார்கள் என்றால் பிரதமர் இந்திரா காந்தியினுடைய படத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தீயிட்டுக் கொளுத்திய நண்பர் குமரி அனந்தன் அவர்களுடைய தலைமையிலேதான் வெளியேறி இருக்கிறார்கள். என்பதுதான் வேடிக்கை, விசித்திரம், வேதனை, வெட்கக் கேடு.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

1990 மார்ச் 31]

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 219-ன் கீழ் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொண்டு வருகின்றேன். திருநெல்வேலி பதிப்பு தினமலர் பத்திரிகையில் 21-3-1990ஆம் நாள் செய்தித் தாளின் முதல் பக்கத்தில் 3ஆம் பத்தியில் சட்டசபையில் ரகளை, அமளி என்ற தலைப்பிட்டு சட்டப் பேரவை நிகழ்ச்சி குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியதாக செய்தி வந்துள்ளது. செய்தியாவது—

10-10 மணி.

''பாண்டியனும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் பேசிய நா கூசும் சொற்களை இந்தச் சபை இதற்கு முன் கேட்டதே இல்லை'' என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் பேசியதாக அந்தச் செய்தி.

ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. குமரி அனந்தனும் தனது பேச்சில் ''தி.மு.க. உறுப்பினர்களும்'' என்று பேசியதும் இல்லை. ஆக பேசாத ஒன்றை தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் வேண்டும் என்றே திருநெல்வேலி பதிப்பு தினமலர் செய்தியாய் வெளியிட்டுள்ளது. அதனை திருநெல்வேலியில் படித்த பல்வேறு வாசகர்கள் நண்பர்கள் எனக்கு கடிதம் மூலமாக சட்ட மன்றத்திலே இப்படி ஒரு இழி நிலை ஏற்படுகிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு இந்தச் செய்தி அங்கே வலுப்பெற்றிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தி உண்மைக்கு புறம்பானது. புறம்பானது மட்டுமல்ல, சட்டப் பேரவையினுடைய 219-வது விதியின் கீழ் இது அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்பதும், ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற இப் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து ''தினமலர்'' நாளிதழ் ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

4. அறிவிப்பு.

இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி சட்டமன்றப் பேரவையில் ஓர் அணியாகச் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட திரு. ந. நஞ்சப்பன் அவர்களைச்

சட்டமன்ற ... TRUTH ALONE TRIUMPHS